
உ
சிவமயம்



யாழ்ப்பாணம் – மண்டைதீவு
சைவ வேளாண்குலத்திலகர்

அமரர். உயர்திரு.

# கார்த்திகேசு குலசிங்கநாதன்

அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

## நினைவு மலர்

**14.03.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மண்ணில்
17.11.1937

விண்ணில்
12.02.2010

அமரர். உயர்திரு.

# கார்த்திகேசு குலசிங்கநாதன்

## திதி நிர்ணயம்

சீர் விளங்க விரோதி ஆண்டு தைத்திங்கள் முப்பதாம் நாள்
பார் விளங்க வெள்ளி அதிகாலை அபரபக்க சதுர்த்தசியில்
பேர் விளங்க குலசிங்கநாதன் உலகியலை நீத்து மெய்யகன்று
நீர் வழங்கு கங்கைச் சடையரசு சிவ பதம் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

புகழ் சிந்தும் மணடைதீவில்

அன்பினாலும் பண்பினாலும் உயர்ந்து நின்று

எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்

மெழுகு வர்த்தியாக இருந்து - எம்மை

அன்புடன் அரவணைத்து - இவ்

உலகில் எம் புகழைப்பார்த்து

புன்னகை சிந்தும் திருமுகத்துடன்

புது உலகம் தேடிச் சென்ற

எம் அன்புத் தெய்வம்

**கார்த்திகேசு குலசிங்கநாதன்** என்னும் உங்களின்

இனிய நினைவை மனதில் சுமந்து கொண்டு

இம் மலரினை காணிக்கையாக

சமர்ப்பணம் செய்கின்றோம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குலதெய்வ வணக்கங்கள்

## விநாயகர் துதி

பண்பாட்டில் விளங்கும் உயர் மண்டைதீவினிலே திரு
வெண்காட்டில் உறை சித்தி விநாயகர் துயர்
உண்டான போது உடன் வந்தாரைக் காத்தவன் அவன் புகழ்
கொண்டாடிப் பணிந்திடுவோம் நாயகனின் தாளினை.

## நடராஜர் துதி

ஆடும் அரசே தில்லை நடராஜா உனைக் காணவே
தேடும் அடியவர்க்கு அருள்வாய் மெய்யன்பினாலே
கூடும் சிவகாம சுந்தரியுடன் உனைக்காண திருவெண் காட்டிலே
பாடும் பரிசளித்தாய் நினது திருப்பாதம் நாம் காணவே.

## வீரபத்திரர் துதி

கண்டுப்புளியடியல் ஆட்சி செய்கின்றாய்
வரும் அடியவர் தமக்கெலாம் ஆசி கொடுத்தாய்
பண்டு புகழ் விளங்கும் சிவ உக்கிர வீரபத்திரா
பெரும் புதுமைகள் நிறைந்த சிவஞான பத்திரா
தொண்டு செய்தவர்க் கெல்லாம் அருள் கொடுத்தாய்
ஒருதுயர் வந்த போது உடன் இருந்தாய்
மண்டைதீவின் பெருமைக்கோர் மகிமை கொடுத்தாய்
அருள் மலர்த்தாள் தந்தெம்மை அணைத்துக் கொள்வாய்.

## முருகன் துதி

பழகும் தமிழ்த் தலைவா முகப்பு வயல்க்கந்தா
மகிழும்படி உனது திருவடியினைத் தொழுவோம்
நிகழும் விழா எல்லாம் என் மனம் எண்ணுதே முருகா
திகழும் முகப்பு வயல் நின்று புகழ் வீடு குகா
உழவும் பயிருமன்றே உனைச்சுற்றி ஆளும்
அருளும் பார்வை கொண்டே வீற்றிருக்கின்றாய்
பொருளும் புகழும் உனது திருவடியிலே குகா
குன்று தோர் ஆடும் சென்னியூர் தலைவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துமாரி துதி

மின்னல் இடையாள் வேப்பம் திடல் மேவியருந்தாள்
பின்னல் அழகாய் அன்பர்க்கு காட்சி கொடுத்தாள்
சென் நெல் விளையும் பூமியல் காவலிருந்தாள்
அன்னை ஆதிமுத்து மாரி எமக்கு அருளைத்தருவார்

## வைரவர் துதி

ஆதரித் தருள்தந்த ஆதிவைரவமூர்த்தி
ஆதாரம் எங்கள் குலத்திற்கே நினது பாதாரம் சுவாமி
மேவும் உனது பணி செய்ய உன் வாசலில் ஓர்
தாவாரம் தந்தவனே சமுத்திரக் கரையிருந்தருள்வாயே.

## நயினாதீவு நாகபூசணி அன்னை துதி

அலை கடலின் நடுவே ஆட்சி செய்யும் ஈஸ்வரி
அன்னை நாக பூசணித்தயே உனது பாதமே கதி
கலைகளெல்லாம் நினது பெருமை சொல்லும் கலாதரி
காரணி பூரணி புன்மை தீர்க்கும் நாக சுந்தரி
மலைமகள் கலைமகள் அலைமகளும் நீயே தாயினி
மங்கலம் அருளும் எங்கள் திருமாலின் சோதரி
தலை அலையாகக் காண்பார் உனது தேர் திருவிழாவிலே
கையிலை நாதன் இடப்பாகம் இருந்து அலங்கரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்

# திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின் அருள் ஆவடுதுறையரனே

## திருவாசகம்

சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள் ஆர
வந்தனை ஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்காடனையே மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலத்தனியே னேற்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஆர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத் தொடுமுடனே
பூதலந்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமு மருளிச்
சோதிமணி முடித்தாமமுந் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## பெரிய புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அருளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்விகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலங் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

கருவுற்ற நாள் முதலாக உன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானும் கிடந்தலைந் தெய்த்தொழிந்தேன்
திரு வொற்றியூரா, திருவாலவாயா, திரு ஆரூரா
ஒரு பற்றிலாமையும் கண்டிரங்காய் கச்சி ஏகம்பனே

## திருவாசகம்

கடயவனே கருணையினால் கலந்தெனை ஆண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய் விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்கோ.

## திருவிசைப்பா

எம் பந்த வல்வினை நோய் தீர்த்திட்டெனையாளும்
சம்பந்தன் காழியர் கோன், தன்னையும் ஆட்கொண்டருளி
அம்புந்து கண்ணாளும் தானும் அணிதில்லைச்
செம் பொன் செய் அம்பலமே சேர்ந்திருகலாயிற்றே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை மணவாளனுக்கு ஆட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

வேனின் மதனைந்து பாணம்விட நொந்து
வீதிதொறுநின்ற - மடவார்பால்
வேளை என வந்து தானினில் விழுந்து
வேடை கெட நண்பு - பலபேசி
தேனினுமணந்த வாயமுதுண்டு
சீதள தாணங்க னினின் மூழ்கித்
தேடிய தனங்கள் பாழ்படமுயன்று
சோகதிய தின்றி - யுழல் வேணோ
ஆனிரைதுரந்து மாநிலம் அளந்தொ
ராலிலை யிலன்று - துயில்மாயன்
ஆயர்மனை சென்று பால்தயிர ளைந்த
ஆரணமு குந்தன் மருகோனே
வானவர்பு கழ்ந்த கானவர்ப யந்த
மானொடுவி னங்கு மணிமார்பா
மாமறைமு ழங்கு ஸ்ரீபுருடமங்கை
மாநகர மர்ந்த பெருமானே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

அலை மோதும் ஆழிகள் நடுவினிலே முத்தென விளங்குகின்ற இலங்கைத்தீவினிலே தமிழ் தளைதோங்கும் யாழ்ப்பாணப் பகுதியிலே தென்திசையில் அமைந்திருக்கும் சிறு தீவுகளில் தலைத்தீவு நான்கு திசையும் கடலால் சூழப்பட்ட அழகிய சென்னியூர், இங்கே தொன்மை புகழ் ஓங்கி நிற்கும் சைவக் கோயில் தெங்குடன் நிறை கற்பக தரு வளர்ந்து காட்சிதரும் புகையிலையும் நெல்லும் செழித்து வளரும் சிறந்த வளம் நிறைந்த தீவு இத்தீவின் பாரம்பரிய பெருமை வீரம் செறிந்த மறவர் வாழும் சிறியதீவு பாரம்பரியம் போற்றும் சைவத் தமிழ் வீடு ஏரும் பல உழவர் ஏற்றம் பெறும் தீவு வாரும் என அழைத்து வேளாண்மை செய்யும் பண்பாடு பாரும் தெரிந்த சிறிய மண்டை தீவு.

கோயல்களின் பெருமையோ சொல்ல தெவிட்டாது வந்தவுடன் வரவேற்க வழியிலே பிள்ளையார் கோயில் தேர் அசைந்து வரும் திருவெண்காட்டுச் சித்தி விநாயகர் கோயில், பேரும் விளங்கும் முகப்புவயல் கந்தசுவாமி கோயில், வேரும் தளைத்து ஓங்கும் வேப்பம் திடல் முத்துமாரி அம்மன் கோயில் சீரும் சிறந்து விளங்கும் கண்டுப்புளியடி வீரபத்திரர் கோயில், ஆதவன் ஆரோகணிக்கும் கிழக்கினிலே கண்ணனி அம்மன் கோயில், ஆதிவைரவர் கோயில், சாம்பலோடைக் கண்ணகி அம்மன் கோயில், திருப்புலம் கந்தசுவாமி கோயில் திருதிருக்கை வைரவர் கோயில், பண்டககாலை வைரவர் கோயில் கிடங் கோயில் வைரவர் கோயில், ஈச்சன் தரவை வைரவர் கோயில் வானக வைரவர் கோயில், வேப்பம் திடல் மாணிக்கப்பிள்ளையார் கோயில் செம்பாட்டு வைரவர் கோயில் முருங்கப்புலம் நாகதம்பிரான் கோயில், செம்பாட்டு வைரவர் கோயில், முகப்பு வயல் ஐயனார் கோயில், நமணங்காட்டு வைரவர் கோயில், கொவ்வைக்குழி தில்லேஸ்வரர் கோயில் கடையற் சுவாமி கோயில், தலைக்கீரி வைரவர் கோயில், அல்லைப்பட்டி ஐயனார் கோயில், இறையருள் நிறைந்த சைவத் திருக்கோயல் பல நிறைந்த தீவு இறை அன்பின் பிறப்பிடமாய் சம்பேதிருவார் ஆலயம் அன்னை வேளாங்கண்ணி இன்றும்பல சிறப்புக்கள் நிறைந்த சென்னியூரம். எங்கள் மன்டை தீவு.

அன்புள்ளவரும் பண்புள்ளவரும் வாழ்ந்த ஊர் இன்னும் பண்புடையோரும் அன்புடையவள்களும் வாழும் ஊர் இப்படி சிறப்புக்கள் பல நிறைந்த மண்டைதீவினிலே உயர்சைவ வேளாளர் குலத்தில் பிறந்த கார்த்திகேசு செல்லம்மா தம்பதியினக்கு குலவிளக்காய் குலசிங்கநாதன் அவதரித்தார். அவருடன் உடன் பிறந்த சகோதரிகளாக புஸ்ப்பராகம், தவமணிதேவி, நேசரட்ணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகலட்சுமி என்பவர்கள் பிறந்தார்கள். இவர்கள் ஐவரும் மகிழ்ந்து நாளில் குலசிங்கநாதன் அவ்வூரைச் சேற்ந்த உயர்வேளாலகுல கந்தையா செங்கமலம் தம்பதிகளின் ஒரே மகள் சிறீகண்ட தேவி எனும் மங்கை நல்லாளை திருமணம் செய்து அன்போடு வாழும் நாளில் இவர்கட்கு விஜியலதா, ஸ்ரீமயூரன், முகுந்தன், விஜிதா, வித்தியா, பிரதீபா, எனும் ஆறு செல்வங்களை பெற்றெடுத்தனர். பிள்ளைகளிற்கு அன்பையும் கல்விச்செல்வத்தையும் பண்பையும் ஊட்டி வளர்த்தார். அதன்பயனாக விஜயலதாவும் விஜிதாவும் பட்டம் பெற்று ஆசிரியர்கள் ஆனார்கள். அப்படிவாழும் நாளில் மூத்தமகள் விஜியலதாவிற்கு அதே ஊரைச்சேர்ந்த குமாரவேலு செல்வக்குமார் என்பவரைத் திருமணம் செய்துவைத்து இன்புற்றார். இதளபயனாக முதல்குலமணியாக கேதாரனும், சாமந்தி, ஆருரன் என்ற மழலைகளைப் பேரக்குழந்தைகளாக கண்டு மகிழ்ந்தார் அடுத்து ஸ்ரீமயூரன் பிரான்ஸ் நாட்டில் வசித்துவருகிறார். இளைய மகன் முகுந்தன் நல்லூறைச் சேர்ந்த நவனீதச்சந்திரன் இளந்துளசியை மணஞ்செய்தார். அடுத்த மகள் விஜிதா பொலிகண்டியைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் ஸ்ரீ ரஞ்சனை திருமணம் செய்தார். அடுத்த மகள் வித்தியா வேலணையைச் சேர்ந்த சோமலிங்கம் சுவேதனைக்கரம் பற்றினார். அதன் பயனாக ஆரதி என்ற மழைச்செல்வத்தைக் கண்டு மகிழ்ந்தார். அடுத்து ெல்வ மகள் பிரதீபா அன்பவர் அனலைதீவைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை தயாதரன் என்பவரைகரம்பற்றி அதன் பயனாக தணிகன் என்ற செல்வப்பேரனைக் கண்டு மகிழ்ந்தார் குலசிங்கநாதனும் பேரன் கண்டு பேத்தி கண்டு மன நிறைவுடன் வாழ்ந்து 12.02.2010 அன்று இறைவனின் திருப்பாதம் அடைந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் துயரம்

என் மனதை நீயறிந்து எனனுடனே வாழ்ந்திருந்தாய்
உன் உறவால் ஆறு செல்வ ங்களைப் பெற்றேன்
கண்ணிமையாய் காத்திருந்து ராசாத்தியென அழைத்தீர்கள்
வன் காலம் வந்து உம்மை அழைத்ததை நான் அறியேன்
பண்ணாக பாடல் படித்தென்னை மகிழ் வித்தீர்களே
எண்ணாமல் இருக்குமோ என் மனது தாளாது
புண்ணியம் செய்தமையாய் சிவனிடமே சென்றீர்கள்
நான் என் செய்வேன் என் உயிரே எல்லாம் சிவமயமே.

## மகள் லதாவின் துயரம்

என்னை வழி அனுப்பி வைத்த என் பப்பா
நீங்கள் நீண்ட வழி சென்ற தென்ன
பின்னை வந்து பார்ப்போம் என்று எண்ணியிருந்தோம்
நாங்கள் பிறதேசம் சென்று நின்மதியைத் தானிழந்தோம்
எங்கள் தெய்வமே
அன்பிற்கு நீங்கள் தானே ஆருயிர் பப்பா
மன்னுயிர்களெல்லாம் மாதவனின் காப்பிலன்றோ
என்னும் நிலையான சிவபதமே சேர்வீர்கள்

## குலமகன் மயூரன் குமுறல்

கடன் செய்ய வழியற்ற பாவி பப்பா
நான் உடனிருந்து பார்க்க வில்லை உற்ற குறை
தீர்கவில்லை திடமாக இருந்த போது உடன் இருந்தேன் பப்பா
இடம் மாறி இருந்தபோது இடையூறு வந்த தென்ன
விடமான செய்தி அறிந்து முடமானது நெஞ்சம்
குடம் சரிந்து ஓடும் நீரானதே வாழ்வென்று
புடம் போட்ட தங்கமேனித் தலைவன்தாழ் தஞ்சமென்று
இடை விடாது பற்றி சிவத்திடம் கலந்திருப்பீர்கள் பப்பா.

## செல்வமகன் முகுந்தனின் குமுறல்

காண்பேன் என நினைத்தேன் பப்பா
முகத்தைக் காணக் கிடைக்கவில்லை
வானத்தால் வந்த செய்தி என் தலை மேல்
பேரிடியாய் விழுந்ததுவே என்பப்பா
போன இடத்தினிலே பொருள் தேடியுமென்ன
கால இறுத்தியிலே கடன் செய்ய முடியவில்லை
செல்வனை அழைத்த வாயில் பால்வார்க்க வில்லைப் பப்பா
தீரு மோ இத்துயரம் என்பப்பாவே ஈசனடி சேர்வீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் விஜியின் கதறல்

விஜி அப்பு என ஓயாது அழைத்த பப்பா
பசி எனும் முன்னே புசியென தந்த பப்பா
வாசி வாசி என பத்திரிகையும் நூலும் தந்த பப்பா
ஆசி மகராசி என ஆசி கூறினீர்கள் பப்பா
பேசி நகைச் சுவையாக என்னை மகிழ் வித்தீர்கள்
யோசிக்குமுன்னம் ஓசையின்றிப் போனதென்ன
நேசித்தகுடும்பம் நிலைகுலைந்து நிற்கையிலே
காசிக்கும் மப்பால் கையிலை வாசனிடம் சென்றீர்கள்.

## வித்தியா குமுறல்

அருகிருந்து பார்க்கவில்லை ஆறுதலும் கூறவில்லை
அழுது புலம்பியென்ன ஆறுமோ என்மனது
பெருகுதே துயரம் பேதை நான் என்ன செய்வேன்
பொழுது புலருமுன்னே போயாமறைந்தது எங்கே பப்பா
உருகி நினைந்து உத்த மனார் சிவமத்தை அருகிக்க
வேண்டுகிறேன் என் அன்பான பப்பாவே.

## தீபாவின் துயரம்

செல்லமகளாக எனை அணைத்து செல்லக் கதைகள் சொல்லி
மெல்லச்சிரித்து மேலான அறிவுதந்த பப்பா
அப்பனென அழைத்து அன்பான பப்பாவே
கல்லோமனது கவர்ந்தான் காலன் அவன்
என்னே சிவத்தின் திருவிளையாடலப்பா
சொல்லவோ வார்த்தையில்லை துயரமெனை வாட்டுதே
எல்லையில்லா ஈசன் திருப்பாதம் அடைந்தீர்கள்.

## மருமக்கள் :- செல்வக்குமார் ஸ்ரீரஞ்சன். சுவேதன் தயாதரன்

## மருமகள் :- துளசி

அழகிய சிரிப்பின் அன்பைக்கண்டோம் மாமா
பரிவின் முறையின் உறவைக்கண்டோம்
பழகும் பண்பில் பாசங்கண்டோம்
பேச்சில் உங்கள் அறிவைக்கண்டோம்
இளகும் இரக்க மனதைக் கண்டோம்
அரனின் பாதமதே தஞ்சம் என் போம்
மாமா உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிகள் புலம்பல்

தம்பி தம்பி என்று தவமாய் கிடைத்தவன் நீ
எங்கு சென்றாய் என் பிறப்பே எப்போ காண்போம்
மங்கிவரும் காலம் எங்களை வாட்டுவது அறியாயோ
தேடி யலைக்கின்றோம் தேவனோடு சேர்ந்து விட்டாய்
அண்ணா உடன் பிறந்த உத்தமனே எங்குசென்றாய்
என்ன பாவமண்ணா உமைப்பிரிய நாங்கள் செய்தோம்
கண்ணான எங்கள் அண்ணாவின் ஆசை முகம் காணக்கிடைகுமோ
பேணும் கடவுள் சிவன்பதமே சரணம் சரணம் அண்ணா

## மருமக்கள் (சகோதரிகளின் பிள்ளைகள்)

மாமா இருக்கின்றார் என்று பெருமையுடன் தான் இருந்தோம்
தூரயிருந்தாலும் துணை என்று நாம் இருந்தோம்
எங்களை மறந்து மாயமாய் மறைந்த தென்ன மாமாவே
ஒருமாமா என்றாலும் ஏறாக இருந்த எங்கள் வீர மாமாவே

எங்கள் ஒளி விளக்கே எங்கு சென்றாய்
வா மாமா வந்தொருகால் எங்களைப்பார் மாமா
யார் காவல் இருப்பாரோ எங்களிற்கு
தாயான தனிமாமா உங்களைக்கூவி அழைத்தாரோ
ஈசன் தன் பொற்பாதம்.

## பவானி மைத்துனி புலம்பல்

சுற்றிச் சுற்றி வந்து சுகமறிந்த ஆசை அத்தான் பவா நீ யில்லா விட்டால் உன்வீட்டிற்கு வரமாட்டேன் என்று சொன்னீர்கள். நான் யாழ்ப்பாணம் சென்றவுடன் என்வீட்டிற்கு வராமல் நிரந்தரமாய் சென்றீர்கள் நீங்கள் மறைந்த செய்தி அறிந்து துடியாய் துடித்துவிட்டடேன். முற்றமதில் நீங்கள் நடந்த தடம் மாற வில்லை உங்களின் முகத்தின் புன்சிரிப்பு கண்ணுக்குள்ளே நிற்குது அத்தான் பற்றிய பாசத்தால் மகேஸ்வரன் எங்கே என்று அடிக்கடி கேட்பீர்கள். அளவற்ற அன்பினால் பிள்ளைகள் ஆசை அப்பா என அலற முற்றிய பேர் அன்பினாலே தில்லை முதலவன்தான் சேர்ந்தயே.

மகேஸ்வரன் பவானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி சிவகுருநாதன் (அப்பு) புலம்பல்

துள்ளித்திரியும் நேரத்திலும் அண்ணனைக்கண்டும் மரியாதை
தந்தேன்

பள்ளிப்பருவத்திலே பயந்தும்திரிந்துவந்தேன்
கொள்ளிக்கும் கடன் தந்த குலக்கொழுந்தே
அண்ணா

சொல்லிக் கொள்ளாமல் சுகமென்ற சிவபதம்
நாட்டிச்சென்றீர்கள்

## மைத்துனர் மணிவண்ணன்

மெய்யை உண்மை என்று உலவுகின்றார் அறிவிலார்
மெய்யை பொய் என்று உணர்ந்து கொண்டோ அத்தான்
மெய்யான சிவபதத்தை கைவிடாமல் பற்ற
மெய்யை விட்டு உண்மைப் பொருளைத் **தேடிச்சென்றீர்களோ**

*மணிவண்ணன்*
*லண்டன்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் செல்வமகன் வருவானா?

எங்கள் செல்வமகன் சீராளா
குலம்விளங்க வந்த குலமகனே
எத்தனைபிள்ளைகளை இழந்து விட்டேன்
என்பாசமுள்ள ஒரே ஒரு தம்பியை
எப்படி இழப்பேன்
என் தம்பியுடன் பத்து நாட்களுக்கு முன்
கதைத்தத அந்த வசனங்களை எப்படி மறப்பேன்
உன்னைச் சீராட்டித்தாலாட்டி வளர்த்த நாட்கள்
அந்த ஞாபகங்கள் மறக்கமுடியாதடா
அன்றும் இன்றும் என்றும் எங்களுக்கு நீ குழந்தைதான்
நீ சென்ற சந்நிதானம் நாங்களும் வந்தடைவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கண்ணீரில் கரையும்
பெரியக்காவும்
சகோதரிகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமை மறந்து எங்குற்றாய் நீ

எனது அன்பான அத்தானே
அறிவின் சிகரமே
நேயத்தால் எமது உள்ளம் நிறைந்த
கோமானே குலசிங்க நாதனே
எம் மக்களின் ஆசையப்பாவே
எமை மறந்து எங்குற்றாய் நீ

வாணி என அழைத்து
வார்த்தைகள் பல பேசி
வயிறுலுங்க சிரிக்கவைக்கும்
நகைச்சுவையின் நாயகனே
நான் ஆசையோடு அத்தான் என அழைக்கும்
ஒரே ஒரு அத்தான் நீங்களன்றோ
மறப்போமோ உமை நாமே
எமை மறந்து எங்குற்றாய் நீ

வந்துவிட்டேன் என அறிந்து
விரைந்து வந்து வரவேற்று
நலங்கேட்கும் அத்தானே
நான் இனி கொழும்பு வந்து உங்கள்
அன்பு முகம் காணாமல்
துயர் கொள்வென் என்று எண்ணாமல்
எமை மறந்து எங்குற்றாய் நீ

நான் அத்தான் என்று அழைப்பதையும்
நீங்கள் வாணி என்று அழைப்பதையும்
என் அக்காவை அன்புடனே ராசாத்தி என அழைப்பதையும்
உன் கடைசி முகம் காணாத துயரத்தையும் மறந்து
உமை காண்பது எந்நாளோ
எமை மறந்து எங்குற்றாய் நீ

நேசமிகு அத்தானின் ஆத்ம
சாந்திக்காக சிவகாமி நேசனையே வேண்டுகிறேன்

வாணி
(திருமதி சுந்தரமூர்த்தி கலைவாணி)
இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமுள்ள என் அண்ணா
# எங்கு சென்றாய் ...

பாடிப் பாடி நான் தேடி அலைந்தாலும் உன்
பாதம் பார்க்க முடியாது உன் செந்திருமுகம் காணமுடியாது

பேதை நானும் தேடிக்காண நீ
சென்ற இடமோ தூரமன்றோ பாடி

முத்தம் நிறைந்த செல்வன் நீ
முன்றலில் நிற்கும் முதல்வன் நீ
நித்தம் நடந்த நீண்டபாதை
நோவு கண்டோ ஓடிநின்றாய் பாடி

அன்னை தந்தை இரண்டும் நீ
அன்பு அண்ணன் என்றும் நீ
இரண்டும் இல்லா தெமக்கிருந்த அண்ணன்
நீகடமை செய்வாய் என்று நான் காத்திருந்தேன்

இறைவா உனக் கொரு கோயில் உண்டு
இரவும் பகலும் தீபம் வைத்தேன்
எனக்கென இருந்தது ஒருகுல விளக்கு
இதனுடன் தானா உன்வழக்கு பாடி

**உங்கள் ஆத்ம சாந்திக்காக**
**குல தெய்வத்தை வேண்டி கண்ணீரில் கரையும்**

பாசமுடன்
அன்புத் தங்கை
பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றத்தார்

கூடி வாழ்ந்து கொடுத்து மகிழ்ந்த குலம்
தேடி வந்து எங்கள் நலம் அறிந்த குலம்
வாடி இருந்த போது வந்துடன் இருந்த குலம்
பாடி இருந்த காலம் மறந்துபோமோ குலம்
கோடியிருந்தாலும் உன் போல் வருமோ குலம்
மாடி மனைகளெல்லாம் மாயை என்று எறிந்து
ஆடிய பாதத்து அம்பலவன் தன் அடியே
நாடிச் சென்றனையோ ஓம் நமசிவாய சிந்தனை செய்

## பேரக்குழந்தைகள்

காண ஓடி வந்தோம் அன்பான
தாத்தா
கருணை கொண்ட உள்ளமொடு அணைத்துக் கொண்ட
தாத்தா

தானும் குழந்தையாகி கூடி விளையாடிய
தாத்தா
தணிகனும் ஆரபியும் உங்களை காணவில்லைத்
தாத்தா
காலம் வரும் எல்லோரும் சேர்ந்திருக்க நினைத்தோம்
கால தேவன் உங்களை கவர்ந்து சென்றார் மாயமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ளங் கொண்ட மாமா

அமரத்துவமடைந்த குலசிங்கநாதன் மாமாவை எனது சின்னவயதிலிருந்தே நான் நன்கு அறிவேன். எனது ஊரான அல்லைப்பிட்டியில் அவரது தமக்கையார், எனது உடன்பிறவாச்சகோதரர் குமாரசாமி அவர்களை மணமுடித்து வாழ்ந்து வந்தார். நான் அடிக்கடி என் பெரியதந்தையாரின் வீட்டுக்குச் செல்வேன். சகோதரங்களோடு விளையாடுவேன். அவர்களது வீடும், எங்கள் வீட்டுக்கு அண்மையில் இருந்தது. அப்படியான வேளைகளில்தான் அங்கே இளைஞனாயிருந்த மாமாவைச் சந்தித்தேன். அவர் என்னிடம் அன்போடு உரையாடுவார். கள்ளங்கபடமில்லாத வாஞ்சைமிக்க அன்பு அது அவரது தந்தையார் கார்த்திகேசு மறைந்துவிட்டபின்பு, தாயார் செல்லம்மா மற்றும் சகோதரிமார் மூவருடன் மண்டைதீவில் வசித்த வந்தார். என்னைக் காணுந் தோறும் திருநா எப்படியப்பு இருக்கிறாய்? "மருமகளே நல்லாயிருக்கிறாயா?" என்ற அன்பொழுகும் வினாக்கள் எப்போதும் எழும். இளமையில் உயரமான தோற்றத்துடன் கூடிய மிடுக்கு அவரிடம் காணப்பட்டது. சுறுசுறுப்பு மிக்க விவசாயி அவர் இடைநிலைக்கல்வியுடன் பொது அறிவை வளர்த்துக் கொண்டவர். அல்லைப்பிட்டி மண்டதீவுக்கிராமங்களில் நாடக மேடைக் கலைஞராகப் பலமுறை அவரை நான் பார்த்து மகிழ்ந்துள்ளேன். பைலாப் பாடல்களுக்கு அழகாக நடனம் ஆடுவார்.

மாமா அவர்கள் மண்டைதீவு கிராமத்தின் பொதுப்பணிகளில் ஈடுபட்டுழைத்தவர். கிராமமுன்னேற்றச்சங்கத் தலைவராகக் கடமையாற்றியவர், கிராம சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல்வேறு அபிவிருத்திகளை முன்னின்று செயற்படுத்தியவர். தெற்குக் கடற்கரையிலுள்ள வைரவர் ஆலயப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தியவர். கிராமத்தவர்களின் நன்மை தீமைகளில் பங்கெடுத்தவர். எவராலும் அன்போடு நேசிக்கப்பட்டவர். தமது உறவினரான திரு. கந்தையா தம்பதியரின் மகளைக் காதலித்து மணந்து கொண்டவர். இல்லற வாழ்வின் இனிய கனிகளாக ஆண்கள் இருவரையும் பெண்கள் நால்வரையும் பெற்றுப் பேரின்பங்கண்டவர். நாட்டில் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலையேடு வன்னிக்குச் சென்று நாகபடுவானில் குடும்பத்துடன் கடந்த இரு தசாப்தங்கள் மேலாக வாழ்தவர். தம் பிள்ளைகளைக் கல்வியாலும், பண்பாலும், சீராலும் உயர்த்திவைத்தவர். கடைசிமகளைத் தவிர மற்றவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிச் சிறப்பாக வாழ்ச்செய்தவர். இளையமகனைத் தவிர ஏனையோருக்கு மணமுடித்துவைத்துப் பேரரச்செல்வங்களையும் கண்டு இன்புற்றிருந்தார். நான் அவரைக்கணமுடியாது விட்டாலும் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பும் நினைவுகளும் நீங்கா. அவரை ஐந்து ஆண்டுகளிற்குமுன்பு உறவினர் ஒருவரின் மரணச்சடங்கில் சந்தித்து உரையாடினேன் திடீர்என அவர் காலமான செய்தியறிந்து வேதனையடைந்தேன். 73 வயதில் பாயில் படுக்காமல் நோயில் துவளாமல் அவர் இவ்வுலகை விட்டு பிரிந்து சென்று விட்டார் உழைப்பினாலும் உறுதியாலும் உன்னதமாய வாழ்ந்த ஆத்மா இறைவனிடம் சரணபுகுந்து விட்டது.

அவரின் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறையருள்ளை வேண்டிப்பிராத்திப்போமாக.

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போகுயிரிடை நட்பு"

அன்புமருமகள்
கலாநிதி, பண்டிதர்
செ. திருநாவுக்கரசு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக் சமயப் பண்பாளர்
# அமரர் குலசிங்கநாதன்

நாற்புறமும் கடலலை தாலாட்ட, காற்றுடன் இணைந்து நடனமாடும் நெற் கதிர்களின் அழகின் நடுவே அமைந்த மண்டைதீவுக் கிராமத்தின் பெருமை பற்பல. இத்துணை பெருமைகளின் பங்களிப்பில் மண்டைதீவு மண்ணில் வந்துதித்த, கார்த்திகேசு செல்லம்மா தம்பதிகள் பெற்றெடுத்த தவப்புதல்வன் அமரர் உயர்திரு கார்த்திகேசு குலசிங்கநாதன் அவர்களின் வகிபங்கு காத்திரமானது.

அவர் அணிகின்ற தமிழ்த் தேசிய உடை, அவரின் கனதியான தோற்றம், அவரின் தனித்துவமான ஆளுமைத்திறன் மண்டைதீவு என்றவுடன் குலசிங்க நாதன் என்ற நாமத்தையும் உச்சரிக்க வைத்தன.

இவர் தான் மண்டைதீவில் வாழ்ந்த காலப் பகுதியில் அவர் மண்ணுக்கும் மக்களுக்கும் ஆற்றிய தொண்டு அளப்பெரியது. அந்த வகையில் கிராமசபை உறுப்பினராக. கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவராக இருந்து தான் வாழ்ந்த மண்ணுக்கு தேவையான அபிவிருத்தியினை தன் பதவிநிலையைக் கொண்டும் தனிப்பட்ட முறையிலும் ஆற்றிய தொண்டு என்றும் புகழாரம் சூட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

அத்துடன் தனது காலப்பகுதியில் சமூகப்பணிகளில் மட்டுமன்றி சமயப் பணிகளிலும் ஈடுபட்டவர் என்பதை திடுதிருக்கை ஞானவைரவர் தேவஸ்தான தர்மகர்த்தா சபைத்தலைவராக இருந்து சமயத்தொண்டன் என்பதை நிலை நாட்டியுள்ளார்.

எனவே இப் பெரியாரின் ஆன்மா எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவடிகளில் பேரின்பப் பெருவாழ்வு பெறும்-பெறவேண்டும் என மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

ச. அருணன்
பொறுப்பதிகாரி
வேலணை பிரதேச சபை
உபஅலுவலகம் மண்டைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளராத மனவுறுதி கொண்டவர்

## அமரர். திரு. கார்த்திகேசு குலசிங்கநாதன் அவர்கள்

அமரர். திரு. கார்த்திகேசு குலசிங்கநாதன் அவர்கள் மண்டைதீவு 8ம் வட்டாரத்தில் நான்கு சகோதரிகளுக்கு ஒருவராக பிறந்து மிகுந்த செல்வமாக வாழ்ந்து வந்தவர்..

இவர் தமது சிறுபராயத்தில் மாமனரைப் போல மிகுந்த மதிநுட்பமும், மண்ணுக்கேயுரிய மனப்பாங்கும் கொண்டவராக விளங்கி மண்டைதீவு கிராமசபை உறுப்பினராக தெரிவாகி கிராமத்திற்கு பல வழிகளில் சேவையாற்றியவர்.

இடைப்பட்ட காலத்தில் இடம் பெயர்ந்து மிகுந்த துன்பங்களுக்கு ஆளாக நேர்ந்த வேளையிலும் தளராத மனஉறுதியும் தாயாரின் தவப்பயனும் இறைவனின் அருட் பார்வையும் துணைசேர தமது பிள்ளைச் செல்வங்களை கல்வியாளர்களாக்கி "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்னும் முதியோர் வாக்குக்கமைய செல்வந்த நாடுகளுக்கு அனுப்பிவைத்து தமது சகல கடமைகளையும் சரிவர செய்து வளமுடன் வாழ்ந்து வரும் வேளை இறைவன் அவருக்கு ஓய்வளிக்க எண்ணித்தான் தன்னகத்தே எடுத்துக் கொண்டான் போலும்.

இவர் உறவில் எனக்கு மைத்துனன் ஆனாலும் அரசியல் சமூக சேவை போன்றவற்றில் ஒரனியில் நின்று செயல்பட்ட காலம் என்றும் மறக்க முடியாதது.

மனித வாழ்வில் பிறந்தவர்கள் யாவரும் என்றோ ஒரு நாள் தனது வாழ்வை முடித்துத்தானே ஆகவேண்டும் இவர் தனது கடமைகளை இயன்றவரை பூர்த்தி செய்து இவ்வுலக வாழ்வை விட்டுச் சென்றது மனதுக்கு ஓரளவு ஆறுதலைத் தருகின்றது.

உறவைச் சொல்லி அழுவதனாலே உயிரை மீண்டும் பெற்றுவருமோ என்னும் கவியரசரின் தத்துவம் வரிகளுக்கிசைந்து அவர் பிரிவால் துயருறும் பிரியமான துணைவியார், அன்புச் செல்வங்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள்அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு அவர் தம் ஆத்மா மண்டைதீவு

பூம்புகார் கண்ணகை அம்பாளின் பாதார விந்தங்களில் நித்தியப்பேறடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
அருளானந்தம் ஸ்ரீ பத்மராசா *J.P.*
மண்டைதீவு 1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் கசிந்து சில வார்த்தைகள்

"நெருநல்உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்திவ்வுலகு" என்பது குறள்

நேற்று இருந்தவர் இன்று இல்லை என்று கூறுகின்ற பெருமையுடையது இந்த உலகம். இதற்கேற்ப திரு. கார்த்திகேசு குலசிங்கநாதன் அவர்கள் 17.11.1937 அன்று யாழ்ப்பாண நகருக்கு அண்மித்த போக்கு வரத்துப் பாதை கொண்ட மண்டைதீவில் குலப்பண்பு குன்றாத குலத்தையுடைய கார்த்திகேசு செல்லம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். மண்டைதீவு மண்ணில் விளையாடிப் பள்ளிப்பருவத்தைத் துள்ளியே முடித்து, ஸ்ரீகண்டதேவியின் கரங்களைப் பற்றி இல்லற வாழ்வை இனிதே ஏற்று இன்பமாய் நடத்தி, மாண்புறு செல்வங்கள் அறுவரைப் பெற்று, எப்படியும் வாழலாம் என்றில்லாது இப்படித்தான் வாழ வேண்டுமென்று வாழ்ந்து காட்டி அனைவரும் மெச்ச நன்னிலைப்படுத்தியுள்ளார்.

காலத்தின் கோலத்தால் பல இடப்பெயர்வு களைச் சந்தித்து இறுதியில் கொழும்பிலே வசித்து வரலானார். வரட்டுக் கௌரவமோ தற்பெருமையோ கொண்டவரல்லர். புன்சிரிப்புடன் அளவோடு கதைப்பார். உறவினர், நண்பர்களை அன்போடு அரவணைப்பார். தெய்வமே துணையென்று இறை நம்பிக்கை கொண்டவர். அன்று வெள்ளிக்கிழமை 12.02.2010 சிரித்த முகமும் பலகதைகள் பகன்றவாயும். விழிமூடி வார்த்தை இன்றி ஏனோ மௌனம் தொலைபேசி அழைப்பொன்று "அப்பா போய்விட்டார்" என்றது எங்குமே இருள்சூழ்ந்து கொண்டது. சிறுபதற்றம் தொடர்ந்து விசாரித்து விபரம் அறிந்து ஆறுதலைத்தான் கூற முடிந்தது. துயருக்குரிய செய்திதான் ஆண்டவன் கட்டளை யார் தடுத்தாலும் முடியாது.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
ஆயினும் இறுதியின் தர்மமே வெல்லும்"
ஓம் சாந்தி

எஸ். ஐ. தனபாலசிங்கம் J.P.
குடும்பம்

182, கோயில்குளம்
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே!
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்திரியே!
கங்கண பாணியன் கனிமுகங் கொண்டநல் கற்பகக் காமினியே!
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாககி துக்க நிவாரணி காமாட்சி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே!
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே!
எங்குலந் தழைத்திட எழில்வடிவுடனே எழுந்த நல் துர்க்கையளே !
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளிவீசிடக் கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி

பஞ்சமி, பைரவி, பர்வத புத்திரி, பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்த நல் குமரியளே!
சங்கட தீர்த்திடச் சமரது செய்தநற்சக்தி யெனும் மாயே!
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாககி துக்க நிவாரணி காமாட்சி

எண்ணியபடி நீ யருளிட வருவாய் எம்குல தேவியளே!
பண்ணிய செயலின் பலனது நல்மாய்ப் பல்கிட அருளிடுவாய்!
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே!
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாககி துக்க நிவாரணி காமாட்சி

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லையென்று நீ சொல்லிவிடுவாய்
சுடர்தரு அமுதே ! சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாககி துக்க நிவாரணி காமாட்சி

ஜெயஜெய பாலாசாமுண்டேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி !
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி ஜெயஜெய ஸ்ரீதேவி !
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெயஜெய ஸ்ரீதேவி !
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித ஸோபித லிங்கம்
ஜன்மஜ துஃக்க வினாஸக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவ முனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப வினாஸக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்திய லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித ஸோபித லிங்கம்
தக்ஷ ஸுயஜ்ஞ வினாஸன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுஸோபித லிங்கம்
ஸஞ்சித பாப வினாஸன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவைர் பக்திபிரேலச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

அஷ்டதளோ பரிவேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர வினாஸன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன பஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பாரத்பரம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

லிங்காஷ்டகம் இதம்புண்யம் ய:படேத் சிவஸந்நிதெள
சிவலோக பவாப்னோதி சிவேன ஸஹ மோத தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

ஔவையார் அருளிய

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பும் பல இசை பாட
பொன் அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகெறிப்ப
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாஹன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்ட
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கம் அறுத்து
திருந்திய முதல் ஐந்தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே எந்தன் உளந்தனிற் புகுந்த
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத்திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளி
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கரணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுக்கும் கருத்தறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கமறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேரா நிறுத்தி பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் மூட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்து
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்ஷமமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் முகமாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப்படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுக்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக் கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டும் ஒன்றிடமென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள் வழிகாட்டி
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுதி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
செஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையை தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரனே

(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய்எலிவாகனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சேர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிப்போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ அம்மாஸ்ரீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதத்தைக் கன்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகைபாற்றுப் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறியைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்குத் வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காரும்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குர் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்துஅணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமை செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவொடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்க்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட் சக்தி துலங்கி வந்திடவே
அச்சகத்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர வல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபிராமியந்தாதி

## காப்பு

*தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை*
*ஊரர்தம் பாகத்து உமை மைந்தனேஉலகேழும் பெற்ற*
*சீரபி ராமியந் தாதியெப் பொதுமென் சிந்தையுள்ளே*
*காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.*

## நூல்

*உதிக்கின்ற செங்கதி ருச்சிதி திலகமுணர்வுடையோர்*
*மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை*
*துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன*
*விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே.*

*துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்*
*பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்*
*கணையுங் கருப்புச் சிலையுமென் பாசங் குசமுங்கையில்*
*அணையுந்திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.*

*அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு*
*செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்*
*பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சால்*
*மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே.*

*மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி*
*குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்*
*பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த*
*புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
திருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே.

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே.

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே.

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகி டன்றலைமேல்
அந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாளென் கருத்தனவே.

கருத்தன் வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலமும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமுஞ் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே.

நின்று மிருந்துங் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்று மரும்பொரு ளேயரு ளேயுமையே யிமயத்து
அன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்

# தேற்றம்

மாலவனும் மலரவனும் ஆதிபரஞ்சிவத்தினிலே ஒடுக்கம்
மாதுமையும் மற்றும் உள்ள தெய்வங்களும் சிவத்தினிலே ஒடுக்கம்
மானிடமும் மற்றும் உயிர்களெல்லாம் சிவத்தினிலே ஒடுக்கம்
காலம் கடந்து நிற்கும் ஆதிசிவம் ஒருவரே நிரம்தரம்

ஆக்கியோன்சென்னியூர் தங்கம்
மணிவண்ணன்
திரு வெண்காடு மண்டைதீவு 6



# நன்றி நவில்கின்றோம்

அண்மையில் 12.02.2010 அன்று கொழும்பில் இறைபதம் அடைந்த மண்டைதீவை பிறப்பிடமாகக்கொண்ட எமது இல்லத்தலைவர் திருகார்த்திகேசு குலசிங்கநாதன் அவர்களின் யாக்கை மறைவின் போது அருகிருந்து துயரோடு அலுவல்களை யாற்றியோர்கும் உடன் திரண்டு வந்தோற்கும் கண்ணீர் அஞ்சலிகள் செலுத்தியவர்களுக்கும் உள்ளூரிலும் வெளியூர்களில் இருந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களிற்கும் வெளிநாடுகளில் அமரர் தம்மக்கள் இல்லஞ்சென்று அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும் ஈமக்கிரியை அந்தியேட்டி வீட்டுக்கிரியை சடங்குகளில் சமூகமளித்து பலவழிகளில் உதவிசெய்தவர்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் இந் நினைவு மலர்தனை விரைவில் அச்சிட்டு தந்தவர்களுக்கும், இந் நினைவு மலரை ஆக்கித் தந்த திரு. மணிவண்ணன் அவர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

237, முத்துவெல மாவத்தை
கொழும்பு 15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வம்ச வி

கார்த்திகேசு + 

புஸ்பராகம்

தவமணிதேவி

குலசிங்கந

+

சிறிகண்டே

விஜயலதா

+

செல்வக்குமார்

கேதாரன்
சாமந்தி
ஆரூரன்

ஸ்ரீமயூரன்

முகுந்தன்

+

இளந்துளசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம்

சு + செல்லம்மா

ங்கநாதன் — நேசரட்ணம் — நாகலட்சுமி

\+

ண்டதேவி ← கந்தையா + செங்கமலம்

ர் — விஜிதா + ஸ்ரீரஞ்சன் — வித்தியகலா + சுவேதன் — பிரதீபா + தயாதரன்

சி

சுவேதன் → ஆரபி

தயாதரன் → தணிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் கிருஷ்ணர்.

**MRB** Printers. Tel : 0713019689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org